# கலித்தொகையில் நாடகச் சுவைகள்

**முனைவர் செ.அன்புராணி[1] & கா. முத்து மீனாள்[2]**

**[1]உதவிப் பேராசிரியர் & [2]முனைவர் பட்ட ஆய்வாளர்**

**தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),**

**மதுரை–18. meenamuthu556@gmail.com**

**49**

**ஆய்வுச் சுருக்கம் :**

சங்க அகப்பாடல்களில் கலித்தொகைப் பாடல்கள் நாடகப்பான்மையில் உரையாடல் அமைப்பில் அமைந்துள்ளன. கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகைப் பாடல்களைப் படிக்கும் போது ஒரு சிறந்த சிறுகதைப் படித்த உணர்வோ அல்லது ஓர் உயர்ந்த நாடகத்தை அனுபவித்த உணர்வோ ஏற்படுகிறது. மனிதனுடைய உணர்வுகளைக் கொண்டு உரையாடல்களும் செயலோட்டமும் அமைவதை நாடகங்களில் காணலாம். இன்ப, துன்ப உணர்வுகள் கலந்ததாகவே மனித வாழ்வு காணப்படுகின்றது. இந்த இரண்டு உணர்வுகளைத் தவிர வீரம், கோபம், வியப்பு, அச்சம், இளிவரல், நகை ஆகிய உணர்வுகளும் வாழ்வுடன் கலந்து தோன்றுகின்றன என்பதைக் கலித்தொகை . நாடகப் பாங்காக எடுத்துரைக்கிறது. அதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள் :**

கலித்தொகை – நாடகம் விளக்கம் – தொல்காப்பிய விளக்கம் - அறிஞர் கருத்துக்கள் - நாடகச் சுவைகள்

**முன்னுரை :**

மாந்தர்களின் தேவையை நிறைவு செய்வதற்கான அறிவையும் ஆற்றலையும் தரவல்லது கலையாகும். அது செயல், திறமை, பயன், அழகு, சுவை என்னும் பல்வேறு கூறுகளைக் கொண்டது. நாடகம் என்னும் கலை வடிவம் மக்களுக்கு அறிவையூட்டும் கல்விச்சாலையாக விளங்கியுள்ளது. முற்காலத்தில் இன்று போல் செய்தித்தாள்களோ, ஊடகங்களோ நூல் நிலையங்களோ இல்லை. மக்களுக்கு அறிவையூட்டும் கல்விச்சாலையாகவும் கருவியாகவும் நாடகங்களே திகழ்ந்தன.

**நாடகம் :**

நாடு + அகம் = நாடகம். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது, நாட்டின் சென்ற காலத்தையும், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் ‘நாடகம்’ என்று பெயர் பெற்றிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நாடகம் என்பது ‘உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் காண்ணாடி’ என்பது முற்றிலும் பொருந்தும்.[1]

நாடகம் என்பதனைக் குறிக்கும் ‘Drama’ என்ற ஆங்கிலச்சொல், கிரேக்கச் சொல்லின் அடியால் பிறந்தது. அதாவது ட்ரமோனியன் (Dramonia) என்ற கிரேக்கச் சொல்லின் அடியாகும். இதன் பொருள் ‘ஒன்றைச் செய் அல்லது ஒன்றைப் போல நடித்துக்காட்டு’ என்பதாகும்.

**நாடகம் பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் :**

**“நாடகம் கலைக்கு அரசி, நாட்டின் கண்ணாடி, பாமரர்களின் பல்கலைக்கழகம்,**

**உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அறிவையும், அன்பையும், தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை”**[2] என்று நாடகம் குறித்து அவ்வை சண்முகம் கூறுகிறார்.

**“எல்லாக் கலைகளும் இணைந்து இயங்கும் கலையாதலின் நாடகம் வழங்கும் இன்பம் பெரிது”**[3] என்று நாடக ஆய்வாளர் ஆ.இராமு கருத்துத் தெரிவிக்கிறார்.

**தொல்காப்பியர் கூறும் சான்றுகள் :**

பண்டைத் தமிழகத்தில் தமிழ் நாடகம் சிறந்த நிலையில் இருந்துள்ளது. அது தமிழரால் பெரிதும் போற்றப்பட்டது குறித்து தொல்காப்பியர்,

**“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்” (தொல்.பொருள். அகம் – 53)**

என்று கூறியுள்ளது நோக்கத்தக்கதாகும். இந்நூற்பாவில் ‘நாடகம்’ என்ற சொல்லைத் தொல்காப்பியர் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**கலித்தொகையில் நாடகச் சுவைகள் :**

சங்க அகப்பாடல்களில் கலித்தொகைப் பாடல்கள் நாடகப்பாங்கிலும் உரையாடல் அமைப்பிலும் அமைந்துள்ளன. கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகைப் பாடல்களைப் படிக்கும் போது ஒரு சிறந்த சிறுகதையைப் படித்த உணர்வோ அல்லது ஓர் உயர்ந்த நாடகத்தை அனுபவித்த உணர்வோ ஏற்படுவதை அறிய முடிகின்றது.

தொல்காப்பியத்தில் மெய்ப்பாடுகள் எட்டு என்று கூறுவதைப் போல வீ.கோ.சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் எழுதிய ‘நாடகவியல்’ எனும் இலக்கண நூலில் நாடகச்சுவைகள் ஒன்பது என்று கூறியுள்ளார்.

**“மனணிகழ் பெற்றி வெளியில் தோன்றுமாறு**
**இயலும் சுவையஃ துவகை பெருமிதம்**
**நகை சமம் வெகுளி வியப்பழிப் பவலம்**
**அச்சம் என்மனார் ஆரியப் புலவோர்” (நாடக. 29)**

உவகை, பெருமிதம், நகை, சமநிலை, வெகுளி, வியப்பு, இழிப்பு, அவலம், அச்சம் என்று ஒன்பது நாடகச் சுவைகள் பற்றிக் கூறியுள்ளார். மேலும் சமநிலை என்னும் சுவைநிலையைப் பற்றிக் கூடுதலாகக் கூறியுள்ளார்.

**உவகை :**

உவகை என்பது மகிழ்ச்சி. புலன் (அறிவு), செல்வம், புணர்ச்சி, விளையாட்டு என்ற நான்கின் அடிப்படையில் உவகை தோன்றுகிறது.

**“கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்று ஊரார்**
**சொல்லும்சொற் கேளா அளைமாறி யாம்வரும்**
**செல்வம்எம் கேள்வன் தருமோஎம் கேளே” (கலித். 106:44-46)**

கணவன் கொல்லேற்றைத் தழுவினான் என்று புகழும் புகழ்ச்சியைக் கேட்ட வண்ணம் “யான் மோரை விற்று வரும் செல்வத்தை என் கணவன் தருவானா” என்று தலைவி கூறுவதாக இப்பாடல் வரி

அமைந்துள்ளது. அதாவது, ஆயர் இன மகளிர் தன் கணவன்மார் வீரமுடையவராக இருத்தலையே செல்வமாகக் கருதினார்கள். எனவே இப்பாடல் வரியானது செல்வத்தின் மூலமாக வந்த உவகைச் சுவையாகும்.

**பெருமிதம் :**

பெருமிதம் என்பது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கின் அடிப்படையில் அமைகிறது. மேலும் பெருமிதம் என்பது 'வீரம்' என்பதைக் குறிக்கிறது.

தமிழரின் வீரத்தைப் பறை சாற்றும் விளையாட்டுக்களுள் ஒன்று ஏறுதழுவுதல். 'ஏறு' என்பது 'காளை' மாட்டைக் குறிக்கும். 'ஏறுதழுவுதல்' என்பது காளையைத் தழுவி அதன் வீரத்தை அடக்குவதாகும். இன்று வீர விளையாட்டு என்று சொல்லப்படுகின்ற ஜல்லிக்கட்டு அல்லது மஞ்சுவிரட்டு என்னும் விளையாட்டுக்கு அடிகோலியதும் இத்தகைய ஏறுதழுவுதலே ஆகும். ஏறுதழுவுதல் என்று கூறுவது பெருமிதத்தை வெளிக்காட்டுகின்றது.

**"கோட்டொடு சுற்றிக் குடா வலந்த ஏற்றின்முன்**
**ஆடிநின்று அக்குடா வாங்குவான் பீடுகாண்**
**செந்நூற் கழி ஒருவன் கைப்பற்ற அந்நூலை**
**முந்நூலாகக் கொள்வானும் போன்ம்" (கலித். 103:28-31)**

தன் வயிற்றினுள் சரிந்த குடலைத் தாங்கி, மீண்டும் தன் வயிற்றினுள் இட்டுக் கொண்டு மீண்டும் ஏறு தழுவினான் என்பது அவனது பெருவீரத்தைப் புலப்படுத்துகின்றது.

**நகை :**

நகை என்பது நகைத்தல் என்பதாகும். எள்ளல், பகைமை, மயக்கம் என்ற மூன்றின் அடிப்படையில் நகை அமையும்.

**"கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி,**
**நகைக்கூட்டம் செய்தான்அக் கள்வன் மகன்" (கலித். 51:15-16)**

இப்பாடல் வரிகள் ஓரங்க அமைப்புடன் அமைந்த இன்ப நாடகம் குறித்த பதிவினைக் காட்சிப்படுத்துகின்றது. தலைவன், தலைவி செய்யும் செயலானது நகைப்புக்குரிய சுவையாக அமைவதை அறிய முடிகின்றது.

**வெகுளி :**

வெகுளிச் சுவையானது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற நான்கின் அடிப்படையில் அமைகிறது.

**"எருத்தோடு இமிலிடைத் தோன்றினான், தோன்றி**
**வகுத்தினான் மன்றஅவ் ஏறு,**
**ஏறு எவ்வம் காணா எழுந்தார் எவன்கொலோ**
**ஏறுடை நல்லார் பகை,**
**மடவரே நல்லாயர் மக்கள், நெருநல்**
**அடல்ஏற்று எருத்துஇறுத்தார்க் கண்டுமற்று இன்றும்**
**உடல்ஏறு கோள்சாற்று வார்" (கலித். 102: 26-32)**

இப்பாடலில் ஏறு தழுவுதல் நிகழ்ச்சி பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது நீண்ட கருமையான கைகளால் காளையின் கழுத்தை இறுகத் தழுவி, சில நொடிப்பொழுது அதன் கழுத்தருகே மறைந்திருந்து, சட்டென அதன் இமில் ஏறிப் போரிட்டு காளையின் வலிமையை அடக்கினான். அந்தப் போரில் பெரிதும் துன்புற்று நின்றது காளை. அதன் உரிமையாளர் அத்துன்பத்தைப் பார்க்கப் பொறாது, சினத்தோடு எழுந்து நின்றார். இதன் மூலம் வெகுளி (சினம்), கொலை (அடல்-கொல்லுதல்) என்ற நாடகச் சுவை காணப்படுவதை அறியமுடிகின்றது.

**வியப்பு (அதிசயம்) :**

வியப்பு என்னும் சுவை புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நான்கின் அடிப்படையில் அமைகிறது.

கொழுத்த இமிலுடன் விளங்கும் நல்ல ஏற்றினங்கள் (காளை) காலாலே தரையைக் கிளறி புழுதியை எழுப்பின. மழை பெய்தமையால் ஈர மண்ணைக் கிளறின. ஒன்றோடொன்று மாறுபட்டுச் சண்டையிட்டன. அவையெல்லாம் போர்க்களம் புகும் வீரர்களின் அழகை ஒத்து விளங்கின என்பதை,

**“நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை**
**மாறு ஒற்றுச் சிலைப்பவை மண்டிப் பார்வையால்**
**துளங்கு இமில் நல்ஏற்றினம் பல களம்புகும்**
**மள்ளர் வனப்பு ஒத்தன.” (கலித். 106 : 7-10)**

என்ற கலித்தொகை வரிகளில் காணமுடிகிறது.

போர் செய்யும் வீரர்களுக்கு இணையாக, ஏறுதழுவுதுதலில் காளைகள் இருந்தன என்பதைப் பார்க்கும்பொழுது வியப்பான செய்தியாகக் காணப்படுகிறது.

**இழிப்பு :**

மூப்பு, பிணி, வருத்தம் என்ற மூன்றின் அடிப்படையில் இழிப்பு என்னும் சுவை பிறக்கிறது.

**“விரிந்துஆனா மலராயின், விளித்து ஆலும் குயிலாயின்,**
**பிரிந்து உள்ளார் அவராயின், போதுநூஉம் பொழுதாயின்**
**அரும்படர் அவலநோய் ஆற்றுவாள் என்னாது,**
**வருந்தநோய் மிகுமாயின், வணங்குஇறை! ” (கலித். 28:8-11)**

தோழி கூற்றாக இப்பாடல் வரி அமைந்துள்ளது. அதாவது குயில்கள் தம் பெடையை அழைத்துக் கூவும், இளவேனிற் காலம் வந்த பிறகும், நம் தலைவரோ, நம்மைப் பிரிந்து போனார். அதையே நினைத்து வருந்துவதால், காமநோய் துன்பத்தை உண்டாக்கும் என்று நீயும் வருந்துகிறாய்” என்று தலைவி கூறுவதற்குப் பதில் மொழியாக, ”பிரிந்த தலைவன் மீண்டும் விரைவில் வருவான்” என்று தோழி ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் வரி அமைந்துள்ளது. இப்பாடலில் வருத்தம் என்னும் சுவை இழிப்புச் சுவையின் அடிப்படையில் அமைந்ததாகக் காணப்படுவதை அறியமுடிகின்றது.

**அவலம் :**

அவலச் சுவை என்பது இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கின் அடிப்படையில்

அமைகிறது.

தன்னில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவன் தலைவியைப் பற்றி இப்பாடல் வரி அமைகிறது. குட்டையன் கேள்விக்குக் கூனி பதில் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

**"யாமை எடுத்து நிறுத்தாற்றால் – தோளிரண்டும் வீசி**

**யாம்வேண்டோம் என்று விலக்கவும், எம்வீழும்**

**காள் நடக்கும் நடைகாண்" (கலித். 94: 31-33)**

"ஊர்ந்து செல்லும் ஆமையைத் தூக்கி நிறுத்தினாற் போன்ற உருவத்தோடு இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு, யான் உன்னை விரும்பவில்லை என்று விலக்கினாலும் விலகாமல் என்னை விரும்பி வருகின்ற காமனாக நடக்கும் நடையைப் பார்" என்று கூனி இழிவுபடுத்துவதாக இப்பாடல் வரி அமைகின்றது.

**அச்சம் :**

அச்சம் என்னும் சுவையானது அணங்கு, விலங்கு, கள்வர் தம்இறை என்ற நான்கின் அடிப்படையில் அமைகிறது.

அணங்கு என்பது வருத்தும் உயிரினம் அனைத்தையும் குறிக்கும்.

முல்லைக்கலியில் பெண்ணெருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு வைத்து அதனைத் தெய்வமாகப் பாவித்து வழிபட்டனர் என்பதை,

**"எருமைப் பெடையோடு எமர்ஈங்கு அயரும்**

**பெருமணம் எல்லாம் தனித்தே ஒழிய" (கலித். 114 : 13-14)**

என்ற பாடலின் மூலம் அச்சம் தரும் விலங்கின் கொம்பினைத் தெய்வமாக வழிபட்டதை அறிய முடிகின்றது.

**சமநிலை :**

இச்சுவையானது தொல்காப்பியத்தில் கூறப்படாத மெய்ப்பாட்டு வகைகளுள் ஒன்றாகும். நாடகச் சுவைகளுள் ஒன்றாகக் கூறப்படுகின்றது.

**"புலங்களிற் பற்றறப் பொலிந்தநன் னிலையே**

**சமநிலைச் சுவையெனச் சாற்ற லாகும்." (நாடக.**

ஐம்புலன்களிலும் பற்றின்றி விளங்கும் நல்ல நிலைமையினையே சமநிலை சுவையென்று கூறுவர்.

**முடிவுரை :**

கலித்தொகையில் காட்சிப் பின்புலத்தை வைத்துக் கருத்தை உணர்த்துகின்ற பாடல்கள் அதிகமாக உள்ளன. பாடலின் கருத்துக்களை எளிமையாகப் புரிந்து கொள்ள புலவன் இதுபோன்ற நாடகச் சுவைகளைச் சங்க இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

இவ்வாறாக வாழ்வில் நடக்கக்கூடிய நிகழ்வுகளை (இன்பம், துன்பம்) நாடக வடிவில் வெளிப்படுத்தக் கூடியதாகக் கலித்தொகை பாடல்கள் அமைந்துள்ளன.

மேலும் உயர்திணை மற்றும் அஃறிணை உயிரினங்களை ஒப்புமைக்காட்டி நாடகச் சுவைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள் :**

1. **தமிழ் நாடக வரலாறு – பக். 13**
2. **நாடகக்கலை – பக். 4**
3. **தமிழில் வரலாற்று நாடகங்கள் – பக். 1**

**துணை நின்ற நூல்கள் :**

ஆசிரியர் குழு (ப.ஆ.) - கலித்தொகை மூலமும் உரையும்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு – 1998.

இளம்பூரணர் (உ.ஆ.) - தொல்காப்பிய பொருளதிகாரம்,
கழக வெளியீடு, சென்னை.
இரண்டாம் பதிப்பு 1992.

சூரிய நாராயண சாஸ்திரி : நாடகவியல்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
திருநெல்வேலி.